செ.வெ.எண்: 09 நாள்:02.09.2017

திருநெல்வேலி மாவட்டத்தில் " சுகாதார வாரம்" கொண்டாட்ட விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி,கல்லூரி மாணவ மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் கேடயம் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

-----------------------------------------------------------------------------------------------------

திருநெல்வேலி மணோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக கூட்ட அரங்கில் திருநெல்வேலி மாவட்டத்தில் " சுகாதார வாரம்" கொண்டாட்ட விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்களுக்கு பரிசளிப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி இ.ஆ.ப, அவர்கள் கலந்து கொண்டு தூய்மை திட்ட விழிப்புணர்வை எற்படுத்தும் வகையில் அங்கன்வாடி மையங்களில் சுவர்சித்திரம் வரைதல்,மீம் கிரியேசன், ஒரு நிமிடம் குறும்படம் தயாரித்தல்,உள்ளிட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி,கல்லூரி மாணவ மாணவிகளுக்கு கேடயம் மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:

இந்தியா முழுவதும் பாரத பிரதமர் அவர்களால் தூய்மை பாரத இயக்கம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டம் திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத மாவட்டமாக அக்டோபருக்குள் மாற்றிடும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 1 லட்சத்திற்க்கும் மேற்பட்ட தனிநபர் இல்ல கழிப்பிடங்கள் அடுத்த மாதத்திற்க்குள் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் விழிப்புணர்வை எற்படுத்திடும் வகையில் ஆகஸ்ட் 8 முதல் 15ம் தேதி வரை "சுகாதார வாரம்" கொண்டாடப்பட்டது. இதில் பள்ளி,கல்லூரி மாணவ மாணவிகளுக்கு பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு இன்று பரிசுகள்,கேடயங்கள்,சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் "கட்டி முடிங்க ஜெயித்து காட்டுங்க" போட்டிகள் மூலம் தேர்வு செய்யப்படும் கிராம ஊராட்சிகளுக்கு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு திட்டப்பணிகளும் செய்து தரப்படவுள்ளது. தூய்மை இந்தியா திட்த்தின் கீழ் தூய்மை தொழில்நுட்பங்கள் தொடர்பான போட்டிகளும் நடத்தப்படுகிறது. மாணவ மாணவிகள் அதிக அளவில் பங்கேற்று வருகின்றனர்.

தனிநபர் இல்ல கழிப்பிடம் கட்டுதல், திறந்தவெளி கழிப்பிடம் இல்லாத நிலையின் மூலம் சிறப்பாக சுகாதாரம் மேம்படும். பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள் உங்கள் பகுதி துய்மையாக வைத்திருக்க விழிப்புணர்வை எற்படுத்திட வேண்டும். இப்போட்டிகளில் பங்கேற்ற பள்ளி,கல்லூரி மாணவ மாணவிகளுக்கும், வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என பேசினார்.

இவ்விழாவில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.பழனி, மணோன்மணியம் சுந்தரனார் பல்கலைகழக பதிவாளர் திரு.ஜான் டி பிரிட்டோ, என்.எஸ்.எஸ் ஒருங்கிணைப்பாளர் திரு.ராஜலிங்கம்,மகளிர் திட்ட திட்ட இயக்குநர் திருமதி ஹெட்சி லீமா மற்றும் அலுவலர்கள்,மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வேலி